## *முள்ளொன்று . . .*
## *மலரானது . . . .*

ஈராறு ஆண்டிற்கு ஒருமுறை . . .
பூக்கும் குறிஞ்சிமலர் . . .
பார்ப்பதரிது . . .
பரிப்பதரிது . . .

அதன் நடுவே . . .
பல்லாண்டுக்கு ஒரு முறை . . .
வான்வெளி விந்தைகள் . . .

அதில் . . .
அறிவியல் அதிசயங்கள் . . .
மனிதனை படைத்த இறைவனை . . .
மனிதன படைக்க நினைக்கும் . . .
விஞ்ஞான விளையாட்டுக்கள் . . .

அனைத்தும் தாண்டி . . .
காலத்தின் அதிசயம் . . .
என்றோ வித்திட்டது . . .
இன்று துளிர்ந்தது . . .
குழந்தையில் தொலைந்து . . . .
முதுமையில் கிடைத்தது . . .

இதயம் இரண்டு கலந்தது . . .
காலங்கள் பின்னால் சென்றது . . .
பருத்தி வெடித்து . . .
பறக்கும் இளவம் பஞ்சாய் . . .
என் தென்றல் வருகையிலே . . .
தென்றலும் விலகி நிற்கும் . . .
அவள் வருகை கண்டு . . .
ஒளியும் வெட்கி தலை குனியும் . . .
இவள் முகம் கண்டு . . .
கார்மேகமும் கலைந்து செல்லும் . . .
என்னவள் கார்கூந்தல் அசைவைக் கண்டு . . .
என் கயல்விழி கால் கொலுசு அசைவில் . .
இசையும் இணைங்கி விடும் . . .
அனைத்தும் . . .
என்னவளைக் கண்டு விலகின . . .
என்னவளோ . . .
என்னைக் கண்டு விலகினாள் . . .

அவள் மனமெனும் கரிசல் நிலத்தில் . . .
அன்பை வித்திட்டேன் . . .
நான் வித்திட்டதாலோ . . .
அவள் மனதை தரிசு நிலமாய் மாற்றிவிட்டாள் . . .

வானம் பார்த்த பூமிபோல் . . .
அவள் விழி பார்த்து நின்றேன் . .
அலையில் கரைந்து செல்லும் . . .
காலடி மண்ணாய் . . .
அவள் பிரிந்து சென்றாள் . . .

நான் தனித்து நின்றேன்...

கரையாய் நான் காத்து கிடக்க ...
அலையாய் அவள் பிரிந்து சென்றாள்...
காலத்தின் மாற்றங்கள்...
கனவுகளின் சுழற்சிகள்...

அங்கே...
வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்கள்...
அதில்...
இன்ப துன்ப பரிமாற்றங்கள்...

கடந்தன ... கரைந்தன ...
ஆண்டுகளும்... மாதங்களும்...
காடுகள் வீடுகளாயின...
வீடுகள் ஊர்களாயின...
ஊர்கள் நகரமாயின...

புதியன புகுதலும்...
பழையன கழிதலும்...
காலத்தின் கட்டளையில் ...
கடமை தவறாமல் பணிபுரிந்தன...

ஆண்டுகள்...
ஒன்று, இரண்டு என்று
எண்ணிக்கையில் 20தை தொட்டன...

அதில்...
ஆண்டிற்காண்டு மாறும் எண்ணங்களும் ...
நினைத்தலும்... மறத்தலும்...
மனிதனின் இயற்கை குணமாய்...

அதையும் தாண்டி...
தெரியா இடத்தில் ...
எங்கோ இதயத்தில்...
தூங்கி கிடக்கும்...
ஆழமான நினைவுகள்...

கூடு உடைத்து பறக்கும் பட்டாம்பூச்சியாய்...
மாற்றினாள் என் மனதை...
தூங்கும் நினைவுகளை...
உயிர் கொடுத்து எழுப்பினாள்...
என்னுயிர் கண்மணி...

கண்டேன் அவளை...
ஆண்டுகள் கடந்து...
இரவின் ஒளியில்...
நிலவின் மறுபக்க கருமையை மறைத்து...
முகம் மலரும் பால் நிலவாய்...

அந்த நாள்... இந்த நாள்...
நண்பனின் திருமணமாம்...
நட்புகள் அங்கே மலர...
என்னவள் வருகைக்காக...

மலரும் நினைவுகளுடன்...
கண்களில் தவிப்புகளுடன்...
கால்களில் தயக்கமும்...
தன்னடக்கம் அங்கே...
தாராளமாய் வந்தது...

விடை தெரியா விடுகதைக்கு...
விடை அறியும் விறுவிறுப்பு...
விழியோ பாதையில்...
உள்ளமோ அவள் எண்ணத்தில்...

படபடக்கும் இதயத்துடன்...
பார்வை விலகாமல் காத்திருந்தேன்...
வந்தாள் கயல்விழி...
நீர் ஓட்டமாய்...
அந்நாள் நினைவுகள்...

அவள் எரிக்கும் பார்வையும்...
முட்களாய் உதிரும் சொற்களும்...
சுட்டெரிக்கும்...
அக்கினி மலர்போல்...

நீர்குமிழி போல் அந்நாள் நினைவுகள்...
இதயத்தில் கொப்பளிக்க...
அந்நாள் நினைவுகளோடு...
அவள் பார்வைக்காக காத்திருக்க...

தென்றலாய் அவள் தோழி...
என்னவளை வருட...
கொடியாய் என் மலர் தலையசைக்க...

பட்டாம்பூச்சி போல் என் மனம் சிறகடிக்க...
மழையில் நனைந்த வெள்ளாடாய் மனமும்...
தயக்கமாய் வார்த்தைகளும்...
துடிக்கும் விழிகளுடன் அவள் விழி பார்த்து...
நலம்... நலமறிய ஆவல்...

நிமிடங்கள் கரைந்தன...
மணிகள் ஓடின...
விடை தெரியா மாணவனாய்...
பலமுறை திருப்பும்...
கேள்வி தாள் போல...
இனம் புரியா தவிப்பில்...
ஓரிரண்டு வார்த்தைகள்...
இதனிடையே...
ஆதவன்... அஸ்தமனமும்...
வெண்ணிலா வருகையும்...
நேரத்தை அறிவிக்க...

மெல்ல... மெல்ல...
கலைந்து செல்லும் கார்மேகமாய்...
என் நிலா அவள் பிரிந்து செல்ல...
வெற்று வானமாய் நான் நின்றேன்...

எங்கோ மூலையில்...
உறங்கிய நினைவுகளும்...
உயிர் பெற...
இனம்புரியா உணர்வுகளும்...
சிதறும் எண்ணங்களும்...
இனம் தெரியா தவிப்பில்...
ஈராண்டு இரவுகள்...

அதில்...
இமயம் தொடும் கேள்விகளும்...
அதன் நடுவே...
சுனை நீராய் இன்ப ஊற்றுகள்...

அவை...
விழியின் வழியே...
அரங்கேற...
உறங்கா விழிகளும்...
நீண்ட இரவுகளும்...

அவள் குரலுக்கு காத்திருந்து
தந்தி இல்லா தொலைபேசியில்...
தவழ்ந்து வரும் அவள் குரல் கேட்க...

விடியலுக்கு காத்திருக்கும்...
வெண்பனி போல்...
காத்து கிடந்தேன்...

காலத்தின் மாற்றமோ...
கண்டறிந்த உண்மையோ...
முள்ளாய் தைத்தவள்...
மென்மையானாள்...
சொல்லால் எரித்தவள்...
சொல்லாமல் அழைத்தாள்...

விடியல் கண்டு உருகும் பனித்துளியாய்...
கரைந்து விட்டேன்...
காலங்கள் கடந்தாலும்...
மாற்றங்கள் வந்தாலும்...
காமம் இல்லாத காதல்...
கல்லரை வரை சென்றாலும்...
கற்தூணாய் நிலைத்திருக்கும்...
என்றறிந்தேன்...

மனங்கள் கலந்தன...
மணிக்கணக்கில்...
என்னவள் மனம் திறக்கையிலே...
வாழ்க்கை என்னும் தாமரை...
மேலே அழகாய் தெரிய...
வேர்களாய் துன்பங்கள்...
தாமரைக் குளம் போல்...

இறைவன் உண்டா? இல்லையா?

ஒற்றைக் கேள்வி என் மனதில்...
தாமரை இலை தண்ணீர் போல்...
உறவுகள் பிரிந்து செல்ல...
சூறைக்காற்றாய்...
சோதனைகளும்...
வேதனைகளும்...
சூழற்றி வீச...

உடலும் ... உள்ளமும் நொந்து...
உள்ளம் திரிபோல் கருக...
ஒளியாய் பிள்ளைகளுக்காக...

மெழுகாய் உருகி...
திரியாய் கருகி நின்றாள்...
பந்தல் இல்லா கொடி போல்...
காற்றில் அசையும் விளக்கும் போல்...
நீரில் தத்தளிக்கும் கட்டெரும்பாய்...
ஆலையில் அடிபட்ட கரும்பாய்...
காலத்தின் கையில் சிக்கி...
தனிமரமாய் நின்றாள்...
இறக்கை ஒடிந்த...
கிளிபோல்...

அன்று...
இயற்கையும் வெட்கம் அவளைக் கண்டு - அவளோ
இன்று...
காலத்தின் கட்டளையில்...
கல் மனமாய்...
உணர்வில்லா சித்திரமாய்...
ஒடிந்து விட்டேன் நான்...

பஞ்சவர்ணக்கிளி...
அவள் பரிதவிப்பைக் கண்டு...
பாசத்துடன் மருந்திட...
நேசத்துடன் இருகரம் நீட்டினேன்...
வானம் பார்த்த பூமியில்...
மழைத்துளியாய் என் வார்த்தைகள்...
இருண்ட பாதையில்...
ஒளி விளக்காய் என் உறவு...
உயிர் ஓவியமாய்...
என்னவள்...
பாரங்களை இறக்க...
சுமைதாங்கியாய் அவள் அருகில்...

கொடி அவள் மலர...
பந்தலாய் அவள் அருகில்...
செழிப்பாய் அவள் இருக்க...
செல்லமாய் அவள் அருகில்...

இங்கு கண்டேன் கடவுளை...
இன்று அவள் சோகம் தீர்க்க...
அன்று பிரித்தார் இருமனதை...

இன்று சேர்த்தார் ஒரு மனதாய்...

முள்ளொன்று...
மலரானது...
இங்கே...
அம்மலர் உறக்க...
நான் தென்றலாய்...
தாலட்ட...
இன்பமும் மகிழ்ச்சியும்...
என்றும் அவள் மனதில்...
உதிரும் புன்னகை அவள் இடத்தில்...

அதில்...
உறையா கண்ணீரும் நின்று போக...
விழிகளில் மகிழ்ச்சி பொங்கி வர...

மீண்டும்...
என்னவளைக் கண்டு...
இயற்கை தலை குனிய...

பூத்தாள் என்னவள்...
புதுமலராய்...

விளக்கின் தூண்டுகோளாய் என்றும் அவளுடன்...
இருள் என்னும் பாதை விலகி...
மகிழ்ச்சி ஒளி எனும் பாதையில்...
அவள் நடக்க... அணையா தீபமாய்...
அவளுடன் என்றும்... என்றென்னும்...
தாய் போல் அரவணைப்பாய்...
தந்தை போல் வழிகாட்டியாய்...
ஆசானாய் தெளிவுபடுத்தி...
நண்பனாய் ஆறுதல் கூற...
நட்பாய் இருந்திடுவேன்...

இங்கே...
முள்ளொன்று...
மலரானது...
தோட்டக்காரனாய் நான்...